**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: MC. 1/2022**

**Prosecution Witness: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருவளர்செல்வி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**22.08.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். 21.05.2004 அன்று எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தின் திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் அசலுடன் சரிபார்க்கப்பட்டது .சா.ஆ.2 ஆகவும், எனது மகள் சுகன்யாவின் இறப்பு சான்றிதழ் அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ.3 ஆகவும், இறந்து போன சுகன்யாவின் வாரிசு சான்றிதழ் அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ.4 ஆகவும், 2 ம் மனுதாரர் 1 ம் மனுதாரரின் பராமரிப்பில் வாழ்ந்து வருகிறார் என காண்பிப்பதற்கான ஊராட்சி ஒன்றிய தலைவர் வழங்கிய சான்று அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ.5 ஆகவும், 13.09.2021 அன்று நான் மாண்புமிகு ஜனாதிபதி, பாரத பிரதமர், பாதுகாப்பு துறை அமைச்சர், எல்லை பாதுகாப்பு படை தலைமை அலுவலகம், பெங்களூர் அலுவலகம், மத்திய பெண்கள் அமைச்சகம் மற்றும் குழந்தைகள் நலஅமைச்சகம் ஆகியோர்களுக்கு அனுப்பிய மனு முறையே ம.சா.ஆ,6 முதல் 11 ஆகவும், எதிர்மனுதாரருக்கும் அவர் வேலை பார்க்கும் அலுவலகத்திற்கும் என்னுடைய வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அஞ்சல உறை மற்றும் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.12,13 ஆகவும், 27.12.2021 அன்று எதிர்மனுதாரர் தரப்பில் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ. 14 ஆகவும், என் மகள் சுகன்யாவின் ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ. 15 ஆகவும், எனது ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ.16,17 ஆகவும், 2 ம் மனுதாரரின்

ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது ம.சா.ஆ. 18 ஆகவும், குறியீடு செய்து பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.